# வருடாந்த முன்னேற்ற அறிக்கை

# 2011

## கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

# உள்ளடக்கம்


**1. அறிமுகம்**

**2. 2011 ஆம் ஆண்டு அமுல்படுத்திய கால்நடை அபிவிருத்தி செயற்திட்டங்கள்**

**2.1** 2011 ஆம் ஆண்டின் கால்நடை வள அபிவிருத்தி செயற்திட்டங்கள்

**2.2** கால்நடைத்துறையின் எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்காக பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

**3. கிராமிய சமூக அபிவிருத்தி**

**3.1** கிராமிய பகுதிகளில் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளின் முன்னேற்றம்

**3.2** பின் தங்கிய பகுதிகளில் சமூக – பொருளாதார அபிவிருத்தி

**3.3** தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

**4. 2011 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் 2011.12.31 வரையான நிதியியல் முன்னேற்றம்**

**4.1** கால்நடைவள அபிவிருத்தி செயற்திட்டங்கள்

**4.2** கிராமிய சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

**5. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் முன்னேற்றம்**

**5.1** கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் **(DAPH)**

**5.2** வரையறுக்கப்பட்ட மில்கோ (தனி) நிறுவனம் **(MILCO)**

**5.3** தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை **(NLDB)**

**5.4** வரையறுக்கப்பட்ட இலங்கை-லிபியா விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி கம்பனி **(LANLIB)**

**5.5** மகாவலி கால்நடை வியாபார நிறுவனம் **(MLE)**

**5.6** சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் **(STMF)**

**5.7** பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம் **(PHDT)**

# கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

**நோக்கு**

இலங்கையின் கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அதேவேளை, கால்நடைவள உற்பத்தித்துறையில் தன்னிறைவு காணல்.

**செயற்பணி**

கிடைக்கப் பெறும் வளங்களின் சிறந்த முகாமைத்துவத்தின் ஊடாக கால்நடை வளத்துறையினதும் கிராமிய சமூகத்துறையினதும் பேண்தகு அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

**குறிக்கோள்கள்**

- ❖ கால்நடைவளத்துறை விவசாயிகளின் பேண்தகு, சமத்துவ பொருளாதாரம் மற்றும் சமூக நலன்களின் அடைவு.
- ❖ நுகர்வாளர்களுக்காக போட்டி விலையில் உள்ளூர் கால்நடைவள உற்பத்திப் பொருட்களின் வழங்களை அதிகரித்தல்.
- ❖ 2016 ஆம் ஆண்டளவில் தன்னிறைவு மட்டத்தை அடையும் பொருட்டு, உள்நாட்டுப் பால் உற்பத்தியை அதிகரித்தல்.
- ❖ 2016 ஆம் ஆண்டளவில் தற்போதைய கோழிப் பண்ணை உற்பத்திகளை இரண்டு மடங்காக அதிகரித்தல்.
- ❖ பின்தங்கிய பகுதிகளில் வாழும் கிராமிய சமூகத்தின் சமூக பொருளாதார நிலைமையினை மேம்படுத்தல்.
- ❖ அடிப்படை வசதிகளின் முன்னேற்றம் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி ஆகியவற்றின் ஊடாக கிராமிய சமூகத்தின் வருமான மட்டத்தை அதிகரித்தல்.
- ❖ சமூகசார் அமைப்புக்களை வலுப்படுத்தல் மூலம் கிராமிய சமூகத்தை பலப்படுத்தல்.
- ❖ கல்வி வசதிகளின் நிலைமையை முன்னேற்றுதல், சமய விடயங்களையும், கலாசாரத்தையும் மேம்படுத்தல், விளையாட்டு அபிவிருத்தி, பொழுதுபோக்கு தேவைகளை விருத்தி செய்தல், தொழில்சார் திறமைகளையும், தராதரத்தையும் விருத்தி செய்தல்.

**அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்**

01. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்
02. தேசிய கால்நடை அபிவிருத்தி சபை
03. வரையறுக்கப்பட்ட மில்கோ (தனி) நிறுவனம்
04. வரையறுக்கப்பட்ட இலங்கை – லிபியா விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி கம்பனி
05. மகாவலி கால்நடை வியாபார நிறுவனம்
06. சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்
07. பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம்

# 1. அறிமுகம்

கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சானது, பின்தங்கிய பகுதிகளில் வாழும் கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும், கால்நடை உற்பத்தியில் நாட்டினை தன்னிறைவு காணச் செய்வதையும் நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டது.

இவ்வமைச்சானது இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1. **கால்நடைவள அபிவிருத்தி**
2. **கிராமிய சமூக அபிவிருத்தி**

இலங்கையின் விவசாயத்துறையில் கால்நடை பிரிவு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இது உள்நாட்டு கால்நடை உற்பத்தி தேவையின் பாதியை வழங்குகிறது. அதுமட்டுமன்றி அரை மில்லியனுக்கு மேற்பட்ட சிறு விவசாயிகள் தங்கள் ஜீவனோபாயத்திற்கு ஒரு மார்க்கமாகவும் மேற்கொள்கின்றனர்.

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் கால்நடை அபிவிருத்தி பிரிவானது நூற்றுக்கு ஒரு வீத பங்களிப்பு செய்வதுடன் சிறு பங்குடைமையாளர்களின் வருமானத்தில் 30 – 60 வீதத்திற்கு இடைப்பட்ட வருமானம் கால்நடைத் துறையின் மூலமே பெற்றுக் கொள்கின்றனர். அத்தோடு புரதத்தினை பெற்றுக் கொள்ளும் பிரதான ஊடகம் என்றவகையில் கால்நடை உற்பத்திகளிற்கான கேள்வியும் அதிகரித்துள்ளது.

கால்நடைப் பிரிவில் பால் உற்பத்தி முதலீட்டுக்காகவும், அபிவிருத்திக்காகவும் முக்கியத்துவம் கொடுத்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களால் நாடு பால் உற்பத்தியில் 35 விகிதம் தன்னிறைவு அடைய வழிவகுத்தது.

பால் உற்பத்தி 2011 இல் 258.3 மில்லியன் லீட்டர்களுக்கு மேல் 4.5 வீதத்தால் அதிகரித்துள்ளது. பால் சேகரிக்கப்படும் அளவு 2010 இல் 137.66 மில்லியன் லீட்டர் வரை அதிகரித்தது. 2011 இல் இது 143.7 மில்லியன் லீட்டராக அதிகரித்ததோடு 4.3 % வளர்ச்சியைக் காட்டியது.

இலங்கையின் கிராமிய சமூகமானது, பொருளாதாரத்தின் முக்கிய கூறுகளில் ஒன்றாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. கிராமிய சமூகம் சுமார் 16 மிலியன் சனத்தொகையை கொண்டுள்ள அதேவேளை இதில் ஏறக்குறைய 1 மிலியன் மக்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

2007 ஆம் ஆண்டில் தேசிய வறுமை மட்டம் 15.2 விகிதமாக காணப்பட்டு 2010 ஆம் ஆண்டில் 8.9 விகிதமாக குறைவடைந்தது. நகர, கிராமிய மற்றும் தோட்டப் பகுதிகளில் இது முறையே 6.7, 15.7, 32.0 வீதமாக காணப்பட்டது. எனினும் 2007 ஆம் ஆண்டில் 32% ஆக காணப்பட்ட தோட்டப் பகுதியில் வறுமை மட்டம் 2010 ஆம் ஆண்டில் 11.4% ஆக வீழ்ச்சியடைந்தது.

புவியியல் ரீதியான இவ் அபிவிருத்தி வேறுபாட்டினை கருத்திற் கொண்டு அரசாங்கமானது, பின்தங்கிய பகுதிகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. கிராமிய வறிய சமூகத்தின் விசேடமாக தோட்டப்பகுதி வறிய மக்களின் வாழ்க்கை நிலையைத் தரமுயர்த்துவதற்கு, இவ் அமைச்சானது, பின்தங்கிய பகுதிகளுக்கான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்தியுள்ளது.

# 2. 2011 ஆம் ஆண்டு அமுல்படுத்திய கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

“மஹிந்த சிந்தனை - எதிர்காலத்திற்கான தோற்றம்” 2016 ஆம் ஆண்டளவில் கால்நடை உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைய வேண்டும். இந்தச் செயல்திட்டத்திற்கமைய கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு நாடளாவிய ரீதியில் பல திட்டங்களை ஆரம்பித்தது.

இக்கால்நடைப் பிரிவு 2010 ம் ஆண்டு முக்கிய ஒரு பிரச்சினையை எதிர் நோக்கியது. கோழி இறைச்சிக்கும், முட்டைக்குமான பெரும் தட்டுப்பாடு நிலவியது. அமைச்சு இதில் இருந்து மீட்சியடைய நிரந்தர தீர்வாக ஒரு திட்டத்தை தீட்டி தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு அறிவுறுத்தல் வழங்கியதன் மூலம் 1 நாள் நிரம்பிய கோழிக் குஞ்சுகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் விரைவாக கோழிப் பண்ணை உற்பத்திகளை அதிகரிப்பது மற்றும் தாய் கோழி குஞ்சுகளை இறக்குமதி செய்து உள்நாட்டில் ஒரு வயது நிரம்பிய குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரிப்பதாகும்.

பாற்பண்ணை மற்றும் கால்நடை உற்பத்திகளில 2016 ஆம் ஆண்டளவில் தன்னிறைவை எய்தும் நோக்கை அடைய கடும் பிரயத்தனமும் நன்கு வகுக்கப்பட்ட திட்டமும் அத்தியாவசியமாகும்.

அதற்கமைய இந்த அமைச்சு பரந்த கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கியது. அச்செயற்திட்டங்களை செயற்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

மேலும் அமைச்சரவை உள்நாட்டு பாற்பண்ணை உற்பத்தியை அதிகரிக்க அவ்விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் 2011 மார்ச் 1 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் 4.2 விகித வெண்ணெய் அடங்கிய மற்றும் 8.3 விகித பாற்கட்டி (கொழுப்பற்ற) 1 லீட்டர் பால் ரூபா 50.00 வரை அதிகரிக்க அனுமதி வழங்கியது. அதற்கமைய அமைச்சின் அங்கீகாரத்திற்குட்பட்ட மில்கோ நிறுவனம் கொள்வனவு செய்யும் பால் சம்பந்தமாக ஒரு புதிய விலைப் பட்டியலை தயார் செய்து அதை 2011 மார்ச் 1ஆம் திகதி முதல் அமுல்படுத்தியது. பால் விலை அதிகரிப்பு அந்தத் துறையில் ஈடுபட்டுள்ள பல வர்த்தகர்களையும் கவர்ந்தது. இது பால் உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டும் நிலையை உருவாக்கியதை காணமுடிகிறது.

## 2.1 2011 ஆண்டின் அபிவிருத்தித் திட்டங்கள்

### 2.1.1 கிராம பாற்பண்ணைத் திட்டம்

கிராம பாற்பண்ணைத் திட்டம் பாற்பண்ணை விவசாயிகளின் சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு 2004 இல் ஆரம்பிக்கப்பட்டு அதிகாரங்களுடன் எந்தவித இடையுறுகளுமின்றி அமுல்படுத்தப்பட்டது. 2010 இறுதிவரை மொத்தமாக 811 கிராமிய பாற்பண்ணைகள் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன. மற்றும் 80 பாற்பண்ணைக் கிராமங்கள் 2011 ஆம் ஆண்டு முடிவடைய முன்னர் உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வருட முதல் பாற்பண்ணை விவசாயிகளின் நன்மை

கருதி இத்திட்டத்தின் மூலம் ஒரு விவசாயிக்கு ரூபா 35,000 வரை உயர்த்தப்பட்டுள்ளது. கிராமிய பண்ணை திட்டத்தின் இன்னுமொரு அம்சமாக விவசாய சமூகத்தவர்கள் மத்தியில் இயற்கை வாயு பிறப்பாக்கிகளை அறிமுகப்படுத்துவதாகும்.

**பாற்கிராமங்கள் மற்றும் உயிரியல் வாயு அலகுகள் - 2011**

| மாகாணம் | பாற்பண்ணைக் கிராமங்கள் | இயற்கை வாயு அலகுகள் |
|---|---|---|
| மத்திய | 23 | 12 |
| கிழக்கு | 6 | 5 |
| வடக்கு | 5 | 2 |
| வட மத்திய | 8 | 8 |
| வட மேல் | 7 | 5 |
| சப்ரகமுவ | 9 | 5 |
| தெற்கு | 7 | 8 |
| ஊவா | 10 | 3 |
| மேல் | 5 | 6 |
| **மொத்தம்** | **80** | **54** |

## 2.1.2 திரவ பால் நுகர்வினை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்

நாட்டின் 09 மாகாணங்களிலும் விற்பனை நிலையங்களை நிறுவுவதன் மூலம் திரவ பால்நுகர்வினை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பலனாக மக்கள் தற்பொழுது போஷாக்கு நிறைந்த ஒரு கிளாஸ் பாலை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிட்டியுள்ளது. 2004 தொடக்கம் 2010 வரை இவ்வாறான 535 விற்பனை நிலையங்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறுவப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு நிறைவடைய முன்னர் மேலும் 121 பால் விற்கும் நிலையங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் விற்பனை நிலையங்களுக்கு தொடர்ந்து பால் விநியோகத்தை மேற்கொள்வதற்காக பாற்பண்ணையாளர்களிடமிருந்து பால் கொள்வனவு செய்வது சம்பந்தமாக விரிவான வலயமைப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக சுத்தமான பால் அருந்தும் அபிவிருத்தி திட்டங்களுடன் பாடசாலைப் பிள்ளைகளை மையமாக வைத்து தற்போது ஒரு மாற்றுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பால் விற்பனை நிலையங்கள் - 2011**

| மாகாணம் | பால் விற்பனை நிலையங்கள் |
|---|---|
| மத்திய | - |
| கிழக்கு | 25 |
| வடக்கு | 20 |
| வட மத்திய | - |
| வட மேல் | 22 |
| சப்ரகமுவ | 11 |
| தெற்கு | 15 |
| ஊவா | 11 |
| மேல் | 17 |
| **மொத்தம்** | **121** |

இந்த திரவ பால் நுகர்வினை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பால் விற்பனை நிலையங்கள் நிறுவுதல் மற்றும் நாட்டில் தூய திரவ பால் நுகர்வினை மேம்படுத்துதல், பால் சேகரிப்பு வலையமைப்பை பலப்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் வேறுபல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திரவ பால் நுகர்வினை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் வேறு செயற்பாடுகள் பின்வருமாறு;

## 2.1.2.1 பால் சேகரிப்பு வலையமைப்பை விருத்தி செய்தல்

- **சப்ரகமுவ மாகாணம்**
  - 07 பால் சேகரிப்பு நிலையங்களை ரூபா.0.70 மில்லியனில் நிறுவுதல்
  - 0.75 மில்லியன் செலவில் 10 லீற்றர் பால் கொள்கலன்கள் 104 மற்றும் 20 லீற்றர் பால் கொள்கலன்கள் 50ஐயும் விநியோகித்தல்

- **மேல் மாகாணம்**
  - 06 பால் கரக்கும் இயந்திரங்களை 0.60 மில்லியன் ரூபாவில் விநியோகித்தல்
  - 07 பால் பதனிடும் அலகுகளை 0.07 மில்லியன் ரூபாவில் நிறுவுதல்

- **வட மாகாணம்**
  - கரவெட்டியில் 1.74 மில்லியன் ரூபாவில் வடமராச்சி தென் மேற்கு பிரிவு கால்நடை இனவிருத்தியாளர்களின் (breeder's) கூட்டுறவு சமூக கட்டிடத்தை நிர்மாணித்தல்.

## 2.1.2.2 பண்ணை இயந்திரமயமாக்கத்துக்கான உதவி

1.85 மில்லியன் ரூபாவில் 32 புல் வெட்டும் இயந்திரங்கள் விநியோகித்தல்

- **மத்திய மாகாணம்**
  - 07 மின்சார புல் வெட்டும் இயந்திரங்கள் விநியோகித்தல்
  - 03 கெரோசின் எண்ணை புல் வெட்டும் இயந்திரங்கள் விநியோகித்தல்

- **சப்ரகமுவ மாகாணம்**
  - ∗ 17 மின்சார புல் வெட்டும் இயந்திரங்கள் விநியோகித்தல்
  - ∗ 04 கெரோசின் எண்ணை புல் வெட்டும் இயந்திரங்கள் விநியோகித்தல்

- **தென் மாகாணம்**
  - ∗ 1 மின்சார புல் வெட்டும் இயந்திரத்தை விநியோகித்தல்

### 2.1.2.3 புற்தரை நிலங்கள் அமைப்பதற்கான உதவி

- **மேல் மாகாணம்**
  - ∗ 1.625 மில்லியன் ரூபாவில் 100 புற்தரை நிலங்களை அமைப்பதல்

## 2.1.3 கால்நடை இனவிருத்திப் பண்ணைகளை ஸ்தாபித்தல்

பாற்பண்ணை அபிவிருத்திக்கு முக்கிய தடையாக இருப்பது அதிக தரம் வாய்ந்த பசு மாடுகளுக்கு நாட்டில் நிலவும் தட்டுப்பாடாகும். எனவே தேவையான அளவு பசுமாடுகள் நாடு முழுவதிலும் உள்ள விவசாயப் பண்ணைகளின் மூலம் கால்நடை கன்று அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அவ்வாறாக மொத்தம் 387 கால்நடை கன்று பண்ணைகள் 2010 ஆம் ஆண்டு இறுதிவரை நிறுவப்பட்டு தரம் வாய்ந்த கன்றுகள் நாட்டினுள் விநியோகிக்கப்பட்டது. இன்னும் 299 அவ்வாறான கால்நடை தனியார் அலகுகள் 2011 ஆம் ஆண்டிறுதிக்கு முன்னர் முடிவுக்கு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு மேலாக இந்த தனியார் கன்று பண்ணைகளில் பாவிப்பதற்காக மாடுகளின் இனப்பெருக்க கருக்கள் 2012 இல் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

**கால்நடை இனவிருத்திப் பண்ணைகள் - 2011**

| மாகாணம் | கால்நடை இனவிருத்திப் பண்ணைகள் |
|---|---|
| மத்திய | 49 |
| கிழக்கு | 27 |
| வடக்கு | 40 |
| வட மத்திய | 23 |
| வட மேல் | 22 |
| சப்ரகமுவ | 20 |
| தெற்கு | 19 |
| ஊவா | 22 |
| மேல் | 77 |
| **மொத்தம்** | **299** |

## 2.1.4 வடக்கின் வசந்தம் - இடைக்கால கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள்

கால்நடை அபிவிருத்திக்கு ஏதுவாக அமைந்துள்ள வட மாகாணத்தில் மிருக வைத்திய அலுவலகங்களை நிறுவுவதன் மூலம் அம்மாகாணத்தில் கால்நடை அபிவிருத்தியை மேம்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2011 இல் 6 மிருக வைத்திய நிலையங்களின் கட்டுமானப்பணிகள் முசாலி, புதுக்குடியிருப்பு, பச்சிலைப்பள்ளி, யாழ்ப்பாணம், பாண்டிருப்பு மற்றும் வவுனியா தெற்கு பகுதிகளில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2012 இல் இன்னும் 4 மிருக வைத்திய காரியாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2012 நடுப்பகுயில் பூர்த்தி செய்யப்படும். மற்றும் 2012 இல் மேலும் 4 மிருக வைத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலும் மிருக வைத்தியசாலை அலுவலகத்திற்குத் தேவைப்படும் ரூபா 60 மில்லியன் பெறுமதியான வாகனங்களை கொள்வனவு செய்து விநியோகிக்க ஆரம்ப ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

## 2.1.5 பாற்பண்ணை மாடுகள் இறக்குமதி

முதற்கட்டமாக அவுஸ்திரேலியாவிலிருந்து 500 பாற்பண்ணை மாடுகள் இத்திட்டத்தின் கீழ் தருவிக்கப்படும்.

## 2.1.6 2011 ஆம் ஆண்டு மேற்கொண்ட புதிய அபிவிருத்தித் திட்டங்கள்

### 2.1.6.1 சர்வதேச கால்நடை கண்காட்சி

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் வழிகாட்டலில் மக்களைக் கவரும் குறிப்பாக இளம் வர்த்தகங்களை கால்நடைத்துறையின் பக்கம் கவரும் நோக்குடனும் மற்றும் கால்நடைத்துறை அபிவிருத்தியை துரிதப்படுத்தும் வகையிலும் சர்வதேச கண்காட்சி ஒன்று இலங்கையில் நடத்தப்பட்டது.

மாண்புமிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. கௌரவ பிரதம மந்திரியும் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களும் இதனை பார்வையிட்டனர்.

இந்தக் கண்காட்சி ஜுலை மாதம் 7 - 9 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் பல சர்வதேச கம்பனிகளினதும் சகல மாவட்டங்களில் இருந்தும் வருகை தந்த கால்நடை பண்ணையாளர்களது பங்குபற்றுதலுடனும் நடைபெற்றது. இதற்கு சமாந்தரமாக உள்நாட்டு கால்நடை வர்த்தகங்கள் மற்றும் கோழிப்பண்ணையின் முக்கியத்துவம் சம்பந்தமான தொழில்நுட்ப கண்காட்சியும் அதே மண்டபத்தில் நடைபெற்றது.

### 2.1.6.2 மட்டக்களப்பில் வர்த்தக கண்காட்சி

கிழக்கு மாகாண சபையினரால் மட்டக்களப்பில் ஒக்டோபர் மாதம் 7-9 ஆம் திகதி வரை நடைபெற்ற வர்த்தக கண்காட்சியிலும் அமைச்சு பங்கு பற்றியது. இக் கண்காட்சியின் போது அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட கிழக்கு மாகாண பண்ணையாளர்களுக்கு 30 பெண் கன்று குட்டிகளும், 10 பெண் எருது கன்றுகளும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.1.6.3 திவி நெகும திட்டத்திற்கு பங்கீடு செய்தல்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமிய அபிவிருத்தியை வலுவடையச் செய்யும் தேசிய திட்டமான "திவிநகும" திட்டத்திற்கு உதவும் வகையில் இவ் அமைச்சுடன் இணைந்து கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், மாகாண நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை ஆகியவை பங்கு பற்றியதன் மூலம் அத்திட்டத்திற்கு கைகொடுக்க முடிந்தது. அதற்கமைய இந்த அமைச்சு 225,000 ஒரு மாத கால குஞ்சுகளை திவிநகும திட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்தது.

### 2.1.6.4 தோட்டப் பகுதிகளில் மாட்டுத் தொழுவங்களை நிர்மாணித்தல்

தோட்டப்புற பாற்பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய சவாலாக அமைவது குடிநீர் வளங்கள் பற்றிய முறைப்பாடாகும். பண்ணை நடவடிக்கைகளினாலும், விலங்குகளின் கழிவுகளாலும் நீர் மாசுபடுத்தப்படுகின்றது. இதனை தடுப்பதற்கு அமைச்சு விசேட கழிவு முகாமைத்துவ முறையை அறிமுகம் செய்துள்ளது. இவ்வாறான மாட்டுத்தொழுவ நிர்மாணம் 20 பயனாளிகளுக்காக தலவாக்கலை மிருக வைத்திய பிரிவில் உள்ள மவுன்ட்வேர்னன் தோட்டத்திலும், 12 பயனாளிகளுக்காக பொகவந்தாலாவையிலுள்ள செப்பிள்டென் தோட்டத்திலும் பயனடைவதற்கான நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.1.6.5 பண்ணை பசுவள நிலையங்கள்

இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து புதிய முயற்சியொன்றை அமைச்சு முன்னெடுத்துள்ளது. நாடு பூராகவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பண்ணை வளர்ப்பாளர்களுக்கு இடையிலிருந்து பிரத்தியேக கால்நடை வளர்ப்பாளர் பண்ணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக 12 தனியார் பண்ணைகள் மாகாண திணைக்களங்களினதும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் சேவையாலும் உருவாக்கப்பட்டன. நாடு எதிர்நோக்கும் கேள்விகளுக்கு பண்ணைகளுக்கான மந்தை விநியோகத்தை அதிகரிப்பதற்கான முன்நோக்கிய நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு உரிய பலமான உந்து சக்தியாக இப்பண்ணைகள் மாறியுள்ளன.

## 2.2 கால்நடைத்துறையின் எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்காக பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

பின்வரும் கால்நடைவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்துவதற்காக அடையாளங்காணப்பட்டுள்ளன.

| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட்ங்கள் | ஒதுக்கீடு (ரூ.மி) |
|---|---|
| பாற்கிராம நிகழ்ச்சித் திட்டம் | 50.00 |
| திரவ பால் நுகர்வினை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும் | 50.00 |
| கால்நடை இனவிருத்திப் பண்ணைகளை அமைத்தல் | 25.00 |
| இரட்டை நோக்கமுடைய 1000 பெண் ஆடுகளை இறக்குமதி செய்தல் | 35.00 |
| வடக்கின் வசந்தம் இடைக்கால கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 130.00 |
| பாற்பண்ணை பசுக்களின் இறக்குமதி | 205.00 |
| சிறந்த சேமிப்பக வசதிகளை ஏற்படுத்தலும் மாகாண மட்டத்தில் பால் சேகரித்தலும் | 5.00 |

மேற்கூறப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் 2012 ஆம் ஆண்டு இரண்டு புதிய பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

### 2.2.1 இனவிருத்திக்காக எருதுகளின் விந்துகள் இறக்குமதி

செயற்கை முறை இனப்பெருக்கத்தை மேற்கொள்ளும் வகையில் 50 வீதமான காளை மாடுகளை வெற்றிகரமாகப் பெற வாய்ப்புள்ளது. இந்த விந்தணு இனச்சேர்க்கைக்கான குறிக்கோளானது பசுக்களின் பிறப்பை உத்தரவாதப்படுத்துவதற்கும், இந்த பிரச்சினைகளிலிருந்து பண்ணையாளர்களை விடுவிப்பதுமாகும்.

### 2.2.2 சிறிய மற்றும் நடுத்தர வர்க்க கோழிப் பண்ணைகள் அபிவிருத்தி திட்டம்

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் சிறிய மற்றும் நடுத்தர வர்க்க கோழிப் பண்ணைகளையும், சிறிய முட்டை பண்ணைகளையும் மற்றும் நடமாடும் விற்பனைப் பிரிவுகளையும் ஏற்படுத்துவதன் ஊடாக மக்கள் அதியுயர் புரதத்தை சுலபமாகவும், நியாய விலையில் பெற்றுக் கொள்ள செய்வதாகும்.

# 3. கிராமிய சமூக அபிவிருத்தி

மஹிந்த சிந்தனையின் பிரதான கொள்கையைப் பிரகடனப்படுத்திய அரசாங்கம் கிராமிய தோட்டத்துறையின் அபிவிருத்தி துறைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அரசாங்கம் மஹிந்த சிந்தனை நோக்குக்கமைய கிராம தோட்டத்துறை வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்யும் நோக்கில் பெருந்தொகையான நிதியை அத்துறையின் வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டத்திற்கு சமாந்தரமாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம், சௌமியமூர்த்தி ஞாபகார்த்த மன்றம், மாகாண செயலகம், உள்ளூராட்சி அமைப்புகள், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றின் மூலமாகவும் விசேட திட்டங்களையும் அமுல்படுத்தியுள்ளது.

அத்திட்டங்களாவன;

1 கிராமப் பகுதிகளில் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளின் முன்னேற்றம்.

2 பின்தங்கிய பகுதிகளில் சமூக பொருளாதார அபிவிருத்தி

3 தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்.

## 3.1 கிராமிய பகுதிகளில் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளின் முன்னேற்றம்

சுயதொழில் திட்டங்களை உருவாக்குவதன் மூலம் வேலைத்திறனை உருவாக்கும் பிரதான நோக்கில் இத்திட்டங்கள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வரும் சௌமியமூர்த்தி ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. திறைசேரியில் இத்திட்டத்திற்கு 2011இல் ஒதுக்கப்பட்ட நிதி 190 மில்லியன் ஆகும்.

### பின்வரும் திட்டங்கள் 2011 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டன

### 3.1.1 பிரஜாசக்தி, நவசக்தி அபிவிருத்தி திட்டங்கள்

இத்திட்டத்தில் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்ட 45 பிரஜாசக்தி மத்திய நிலையங்கள் ஊடாக கணனி பயிற்சி மற்றும் இணையத்தள பயிற்சிகள் தோட்டப்புற இளைஞர் யுவதிகளுக்கு, மற்றும் பாடசாலையில் இருந்து விலகியவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. இன்னும் 35 புதிய பிரஜாசக்தி நிலையங்கள் அமைப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

நவசக்தி திட்டங்கள் ஊடாக தோட்டத்தில் உள்ள சுயதொழிலாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் சுய தொழிலாளர்களை ஊக்குவித்தும் அவர்களுக்கு ஒரு மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

**2011 இல் முக்கிய சாதனைகள்**

- 45 பிரஜாசகத்தி நிலையங்களை நடாத்துதலும், பராமரித்தலும்
- 2006 இலிருந்து 2011 வரை 27,911 மாணவர்கள் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

- 2006 இலிருந்து 2011 வரை 862 தகவல் தொழில்நுட்பத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- 52 வர்த்தகர்களுக்கு கடன் வசதி வழங்கப்பட்டுள்ளன.

### 3.1.2 விளையாட்டு மற்றும் கலாசார அபிவிருத்தித் திட்டங்கள்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பெருந்தோட்டத்துறையில் விளையாட்டுத் திறனையும், கலாசார நடவடிக்கைகளையும் அபிவிருத்தி செய்வதாகும். நோர்வூட்டில் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டு அரங்கில் பல்வேறு வகையான விளையாட்டு வசதிகளை இளைஞர் - யுவதிகளுக்கு வழங்கி விளையாட்டுக்களில் பங்கு கொள்ளச் செய்யும் அதேவேளை இறம்பொடை கலாசார நிலையம் இளைஞர் - யுவதிகளுக்கு கலாசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது.

**2011 இல் முக்கிய சாதனைகள்**

- கலாசார மண்டபம், கோவில் மற்றும் பாதைகளைப் புதுப்பித்தல் என்பவற்றோடு முன்னேற்றல்
- 30.08.2011 நுண்கலைக் கல்லூரி உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.
- 62 மாணவர்களுக்கான இசை நடன கற்கைநெறிகள் நடாத்தப்பட்டுள்ளது.
- விளையாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- காற்பந்து மைதானம் இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் அனுசரனையுடன் அமைக்கப்பட்டுள்ளது.
- உடற்பயிற்சி நிலைய நிர்மாணம் வெற்றிகரமாக இடம்பெறுகின்றது.

### 3.1.3 தொழிற் பயிற்சித் திட்டம்

தொண்டமான் தொழிற்பயிற்சித் திட்டம் இளைஞர் - யுவதிகளுக்கு தொழில் பயிற்சியை வழங்குகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 18 பாட நெறிகள் நடத்தப்படுகின்றது.

**2011 இல் முக்கிய சாதனைகள்**

- 369 இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.
- வருடத்திற்கு சராசரி 420 இளைஞர் - யுவதிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது.

## 3.2 பின்தங்கிய பகுதிகளில் சமூக பொருளாதார அபிவிருத்தி

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப் புறத்தின் தேசிய, மட்டத்திற்கு உட்படாத திட்டங்களை தேசிய மட்டத்தில் இணைத்துக் கொள்வதாகும். இத்திட்டம் அமைச்சின் கீழ் வரும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாகவும் உள்ளூராட்சி அமைப்புகள், மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலமும் அமுல்படுத்தப்படுகின்றது. அதற்கிணங்க போக்குவரத்துப் பாதைகள்,

படிக்கட்டுக்கள், நடைபாதைகள், குடிநீர் விநியோகம், பாடசாலைகளை தரப்படுத்தல், மத மற்றும் கலாசார மத்திய நிலையங்களின் அபிவிருத்தி, சுகாதார நிலையங்கள் மற்றும் மலசலகூட வசதிகள் போன்றவைகளை இனங்கண்டு மேம்படுத்தப்படுகின்றன.

இத்திட்டங்களுக்கு திறைசேரியில் இருந்து 2011 ஆம் ஆண்டு ஒதுக்கிடு செய்யப்பட்டு பெறப்பட்ட தொகை 350 மில்லியன் ரூபா ஆகும்.

### 3.2.1 2011 டிசம்பர் 31வரை பின்தங்கிய பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்ட சமூக – பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள்

| செயற்பாடுகள் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | பூர்த்திசெய்யப் பட்டவை | முன்னேற்றம் |
| மின்சார செயற்றிட்டங்கள் | 3 | 3 | - |
| குடிநீர் விநியோகம் | 12 | 10 | 2 |
| பாதை நடைபாதை | 211 | 176 | 35 |
| பாடசாலை கட்டிடம் | 19 | 13 | 6 |
| சமய, கலாசார நிலையங்கள் அபிவிருத்தி | 11 | 10 | 1 |
| விளையாட்டுத் திட்டங்கள் | 52 | 48 | 4 |
| சுகாதார மற்றும் மலசலகூட அபிவிருத்தி | 10 | 9 | 1 |
| பொது வசதிகள் | 40 | 33 | 7 |
| மீள் கூரையிடல் | 4 | 2 | 2 |
| **மொத்தம்** | **362** | **304** | **58** |

### 3.2.2. 2011 டிசம்பர் 31 வரை பகுதி உள்ளூராட்சி ஸ்தாபனங்கள், பிரதேச செயலாளர் மற்றும் மாகாண சபைகள் மூலம் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம்.

| செயற்பாடுகள் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | முடிவுற்றவை | முன்னேற்றம் |
| குடிநீர் விநியோகம் | 2 | 2 | 0 |
| பாதை நடைபாதை | 101 | 69 | 32 |
| பாடசாலை கட்டிடம் | 2 | 0 | 2 |
| சமய,கலாசார நிலையங்கள் அபிவிருத்தி | 3 | 3 | 0 |
| விளையாட்டுத் திட்டங்கள் | 2 | 0 | 2 |
| சுகாதார மற்றும் மலசலகூட அபிவிருத்தி | 1 | 1 | 0 |
| பொது வசதிகள் | 9 | 3 | 6 |
| **மொத்தம்** | **120** | **78** | **42** |

## 3.3 தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் தோட்டத்தில் வாழும் வீடற்றவர்களின் வீட்டுத் தேவையை பூர்த்தி செய்வதாகும். இத்திட்டத்தை இரண்டு ஸ்தாபனங்கள் மூலமாக அமுல்படுத்தபடுகிறது.

### 3.3.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை - சுய உதவி வீடமைப்புத் திட்டம் மற்றும் பிரத்தியேக திட்டங்கள்

இந்தத் திட்டத்தின் கீழ் உரிய குடும்பத்தவா் 07 பா்சஸ் காணியை பெறுவாா்கள். ஒரு வீட்டின் பெறுமதி ரூபா 225,000.00 ஆகும். இதில் ரூபா 100,000.00 கடனாகவும் மீதி 125,000 உதவியாகவும் வழங்கப்படும். 1248 வீடுகளின் நிா்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டு அதில் 397 வீடுகள் முடிவு பெற்றுள்ளன.

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலமாக அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் வளா்ச்சி**

| மாவட்டம் | 2011 வரையான செயற்றிட்டங்களின் வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | 2011 வரையான வீட்டு அலகுகள் |
|---|---|---|
| பதுளை | 329 | 30 |
| மொனராகல | 17 | 17 |
| இரத்தினபுரி | 257 | 165 |
| நுவரெலியா | 284 | 144 |
| கண்டி | 173 | 13 |
| காலி | 66 | 8 |
| மாத்தறை | 71 | 3 |
| குருநாகல் | 20 | 10 |
| களுத்துறை | 24 | - |
| நேரடி நிர்மானம் | 7 | 7 |
| **மொத்தம்** | **1248** | **397** |

### 3.3.2 பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் - புதிய வாழ்க்கை வீடமைப்புத் திட்டம்

இந்தத் திட்டத்தின் கீழ் உரிய குடும்பம் 7 பா்சஸ் காணியை பெறுவாா்கள் ஒரு வீட்டின் பெறுமதி ரூபா 440,000 இதில் ரூபா 200,000 கடனானகவும், எஞ்சிய ரூபா 240,000 உதவியாகவும் வழங்கப்படும். 749 வீடுகளின் நிா்மாணன வேலை ஆரம்பிக்கப்பட்டு அதில் 161 முடிவு பெற்றுள்ளது. 2011 தோட்ட வீடமைப்பு வேலைத்திட்டத்திற்கு ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 93.8 மில்லியன் செலவிடப்பட்டுளது.

**பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் மூலமாக அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் வளர்ச்சி**

| பிராந்தியம் | 2011 வரையான செயற்றிட்டங்களின வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | 2011 வரையான பூர்த்தியடைந்த செயற்றிட்டங்கள் |
|---|---|---|
| காலி | 80 | 25 |
| இரத்தினபுரி | 100 | 50 |
| பதுளை | 117 | 0 |
| கேகாலை | 50 | 50 |
| கண்டி | 92 | 16 |
| ஹட்டன் | 240 | 0 |
| நுவவெலியா | 70 | 20 |
| **மொத்தம்** | **749** | **161** |

# 4. 2011 ஆம் ஆண்டு அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட பிரதான செயற்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதியியல் முன்னேற்றம்

## 4.1 கால்நடை அபிவிருத்தி செயற்திட்டங்கள்

| உப செயற்திட்டம் | நோக்கு குறியீடு | பிரிவு/நோக்கு தலைப்பு | தேறிய ஒதுக்கீடு (ரூ.) | 2011.12.31 வரையான செலவீடு (ரூ.) | நிதியியல் முன்னேற்றம் ஒதுக்கீட்டு வீதம் (%) |
|---|---|---|---|---|---|
| 3 | 2502 | திரவபால் நுகர்வு மேம்பாடும் அனுசரணையும் | 40,616,000.00 | 32,853,767.00 | 80.89% |
| 4 | 2502 | விலங்கு இனவிருத்திப் பண்ணைகளை ஸ்தாபித்தல் | 44,200,000.00 | 39,435,855.00 | 89.22% |
| 8 | 2502 | பாற்கிராமங்களை ஸ்தாபித்தல் | 82,100,000.00 | 69,053,101.00 | 84.11% |
| 14 | 2502 | நடுத்தர கால கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 88,750,000.00 | 29,543,769.00 | 33.29% |
| 15 | 2502 | பாற்பண்ணை மிருகங்களின் இறக்குமதி (12) | 190,000,000.00 | 59,331,988.00 | 31.23% |
| 15 | 2502 | பாற்பண்ணை மிருகங்களின் இறக்குமதி (17) | 15,000,000.00 | 0.00 | 0.00 |
| 20 | 2502 | தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி செயற்திட்டம் | 10,000,000.00 | 3,074,779.00 | 30.75% |
| 13 | 2502 | 1000 இரட்டை நோக்கு ஆடுகளின் இறக்குமதி | 175,775.00 | 22,650.00 | 12.89% |
| 11 | 2502 | குளிரூட்டும் நிலையங்களை ஸ்தாபித்தல் | 24,225.00 | 24,225.00 | 100.00% |

## 4.2 கிராமிய சமூக அபிவிருத்தி செயற்திட்டங்கள்

| உப செயற்திட்டம் | நோக்கு குறியீடு | பிரிவு/நோக்கு தலைப்பு | தேறிய ஒதுக்கீடு (ரூ.) | 2011.12.31 வரையான செலவீடு (ரூ.) | நிதியியல் முன்னேற்றம் ஒதுக்கீட்டு வீதம் (%) |
|---|---|---|---|---|---|
| 1 | 2502 | இளைஞர் வலுவூட்டல் செயற்றிட்டம் (கிராமிய பகுதிகளில் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதி முன்னேற்றம்) | 165,000,000.00 | 140,142,470.00 | 84.93% |
| 2 | 2502 | வசதி குறைந்த பகுதிகளுக்கான சமூக பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டம் | 420,000,000.00 | 367,982,590.00 | 87.61% |
| 16 | 2502 | தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 125,000,000.00 | 106,470,500.00 | 85.18% |

# 5. அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களின் முன்னேற்றம்

## 5.1 கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

1978 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் இலங்கையில் கால்நடை அபிவிருத்திக்கான பிரதான அரச நிறுவனமாகும். கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் நாட்டில் ஏற்படுகின்ற கால்நடை நோய்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல் போன்றவற்றிற்காக சட்டரீதியில் உருவாக்கப்பட்ட ஒரு தேசிய நிறுவனமாகும்.

## 5.1.2 2011 இன் பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்.

### 5.1.2.1 கால்நடை அபிவிருத்தி துறை

#### 5.1.2.1.1 பாற்பண்ணைத்துறை

**அ) கால்நடைத்துறையில் பரவுநோய்களினை கட்டுப்படுத்துதல்**

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமானது வினைத்திறனான நோய்கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் விலங்கு சுகாதார சேவையினை மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களங்களின் உதவியில் நாடு முழுவதிலும் அமுல்படுத்துகின்றது. தேகாரோக்கியமான கால்நடை வளத்தை, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் சில நிகழ்ச்சித் திட்டங்கள் மிக முக்கியமானதாகும். தெரியப்படுத்தப்பட வேண்டிய விலங்கு நோய் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துடன் இணைந்து கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பிரதான நிகழ்ச்சித்திட்டமாகும்.

கால்வாய் நோய், தொண்டை அடைப்பான், கருங்காலி நோய் என்பவற்றிற்கு எதிரான தடுப்பூசிகள் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. மீளாய்வு செய்யப்பட்ட காலகட்டத்திற்குள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் 172,250 அளவுக்களுக்கான HS மற்றும் 24,816 அளவான BQ தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்தது. 4 இலட்சம் அளவான FMD தடுப்பு மருந்துகள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டது. 512,692 மிருகங்களுக்கு FMD தடுப்பு மருந்துகள் கொடுக்கப்பட்டது. 549,222 கால்நடைகளுக்கு HS தடுப்பு மருந்துகளும், 147,785 BQ தடுப்பு மருந்துகளும் 2011இல் கொடுக்கப்பட்டது.

மிருக நோய்கள் தடுப்புத்திட்டத்தின் கீழ் 356 மாதிரிகளை கொண்டு கள மட்டத்தில் நோய்கள் இனங்காணப்பட்டு நாட்டின் கால்நடை நோய்களின் நிலைமையை அவதானித்து 11,343 மாதிரிகளைக் கொண்டு ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

**ஆ) பசுக்கள் மற்றும் எருமை மாடுகளின் மரபியல் விருத்தி**

உள்நாட்டில் மாடுகள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கையினை உயர்த்துவதற்காகவும் மற்றும் உள்நாட்டு பால் உற்பத்தியினை மேம்படுத்தவும் அமுல்செய்யப்பட்ட பிரதான நிகழ்ச்சியாக தரமான எருமை விந்துகளை பயன்படுத்தி செயற்கைமுறை சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் பால் உற்பத்தியினை மேம்படுத்துதல், விந்து உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல், செயற்கைமுறை சினைப்படுத்தல் தொழிநுட்பவியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல், புல் வெட்டும்/ புல் உற்பத்தி ஆகியவற்றில் பயிற்சி வழங்குதல் என்பன இந்நிகழ்ச்சி நிரலின் பிரதான உள்ளடக்கமாகும். குறிப்பிட்ட வருடத்தின் 220,134 மற்றும் 6,874 அளவு விந்துக்கள் மத்திய செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையமான குண்டசாலை நிலையத்திலும், பொலன்னறுவை நிலையத்திலும் செயற்கை முறை சினைப்படுத்தல முறையே 185,125 செயற்கை முறை சினைப்படுத்தல மிருக வைத்திய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மொத்தமாக 45,905 கருத்தணு நிர்ணயத்திற்கான விந்தணு செலுத்தப்பட்ட பசுக்கள் மிருக வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலவரையறையின் போது 56,144 கருத்தரிப்புக்கள் இடம் பெற்றது.

**இ) உயர்ரக கன்றுகள் உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம்.**

செயற்கைமுறை சினைப்படுத்தலினூடாக பிறந்த பெண்கன்றுகளின் முறையான முகாமைத்துவம் பண்ணை மட்டத்தில் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டன. அதனால் செயற்கை முறை சினைப்படுத்தலின் நன்மைகளை உண்மையில் அடைந்து கொள்ள முடியும். செயற்கைமுறை சினைப்படுத்தலினால் பிறக்கின்ற பெண்கன்றுகளை பதிவு செய்தல், நாட்டில் இனப்பெருக்கக்கூடிய மாடுகளினை அதிகரிப்பதற்கு தொழில்நுட்ப மதியுரை சேவையினை வழங்குதல், உள்ளீடுகள் வழங்குதல் மற்றும் பால் உற்பத்தியை அதிகரித்தல் என்பவற்றினை அடைந்து கொள்வதற்காகவே இந்நிகழ்ச்சித் திட்டம் 2008 ஆம் ஆண்டு முதல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலவரையறைக்குள் மொத்தமாக 8,600 உயர்ரக கன்றுகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு காப்புறுதி செய்யப்பட்டன.

**ஈ) கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் பாற்பண்ணை தொழில்நுட்ப ஆய்வுகூடமொன்றை ஸ்தாபித்தல்**

பாற்பண்ணை தொழில்நுட்ப ஆய்வுகூடம் ஒன்று வழமையான செயற்பாடுகளுக்காக சுயாதீன ஆய்வுகளின் நிமித்தமும் பிரதேச கால்நடை ஆய்வு நிலையங்களின் மத்திய நிலையமாக திகழ்வதற்கும் திணைக்களத்தின் மிருக ஆராய்ச்சி நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்திக்கான ஆரம்ப வளர்ச்சி உற்பத்திக்காகவும், பாலின் உற்பத்தி தரத்தை மேம்படுத்தும் பொருட்டு பால் உற்பத்தி செயன்முறையில் உதவி நல்கவும், பால் அடிப்படையிலான உற்பத்திகள், வெளிக்கள ஆய்வுகளை மேற்கொள்ளவும், ஆய்வு கருத்திட்டங்கள் மற்றும் பண்ணை பயிலுனர்களுக்கு ஆதரவு வழங்குவதற்கும், பால் உற்பத்தி செயன்முறை மற்றும் மாணவர்களுக்கு பால் இரசாயனம் மீதான பயிற்சி, பால் சிற்றணுவியல் மற்றும் பால் தொழிநுட்பம் போன்ற செயற்பாடுகள்

யாவற்றுக்கும் ஒரு மத்திய நிலையமாக இது விளங்குகின்றது. இந்த செயற்றிட்டம் 2011 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டதோடு தற்போது ஆய்வுகூடத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை 2012 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றது.

#### 5.1.2.1.2 ஆடு வளர்ப்பு

இத்திணைக்களம் தரமான இனப்பெருக்க ஆடுகளின் கேள்விக்கு முகம் கொடுக்கும் பொருட்டு முறையே இம்புலந்தன்ட, தெலஹர பிரதேசங்களில் இரண்டு ஜமுனாபாரி ஆட்டு பண்ணைகளை பராமரித்து வருகின்றது. இவ்வருடத்தில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்காக அவர்களது கையிருப்பினை உயர்த்துவதற்காகவும் 126 மிருகங்கள் ஆட்டுப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், ஆடுகளின் தொகையினை விருத்தி செய்வதற்காக வெளிக்கள மட்டத்தில் 2,825 செயற்கைமுறை சினைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### 5.1.2.1.3 பன்றி வளர்ப்பு

பன்றி வளர்ப்பு மேல் மற்றும் வட மேல் பிரதேசங்களில் அதிகமாக மேற்கொள்ளப்படுகின்றது. விலங்கு சினைப்படுத்தல் பயிற்சி நிலையத்தில் பன்றி விந்து உற்பத்தி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது, இது 2008 ஆம் ஆண்டு கொட்டதெனியாவவில் முழுமையான செயற்பாட்டுக்கு வந்தது. 2011 டிசம்பர் வரை மொத்தமாக 603 பன்றிகள் செயற்கைமுறை சினைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டன. மீளாய்வு காலப்பகுதியில் மொத்தமாக 1,074 பன்றி குட்டிகள் பிறந்தன.

#### 5.1.2.1.4 கோழி வளர்ப்பு

நாட்டில் இன்று கோழி வளர்ப்பு துறையானது தனியார் துறையின் கைகளின் ஆதிக்கத்தின் கீழ் காணப்படுகிறது. அரசதுறையின் பங்களிப்பானது அதன் ஒழுங்குமுறையையும் தரத்தினையும் உறுதிப்படுத்துவதாகும்.

சில குறிப்பிட்ட நாடுகளில் காணப்பட்ட பறவைக் காய்ச்சல் காரணமாக நாட்டிற்குள் வருகை தரும் பெற்றோர் பறவைகள் மற்றும் பெற்றோரது பெற்றோர் பறவைகள் வருகை விலங்கு நோய் தடுப்பு உத்தியோகத்தர்களினால் கட்டுப்படுத்தப்பட்டது.

சிறு அளவிலான கோழி உற்பத்தி பண்ணையாளர்களுக்கு கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தினால் நியுகாஸ்ட்ல் நோய்க்கான தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்பட்டன. 2011 இல் இத்தடுப்பூசிகள் மொத்தமாக 1,407,000 அளவைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

### 5.1.2.2 கால்நடை சுகாதார அபிவிருத்தி

**அ) பறவைக் காய்ச்சல் உள்வருகை தடுப்பு**

இலங்கையானது, உலகம் பூராவும் பல நாடுகளில் அதிக பாதிப்பினை ஏற்படுத்திய பறவைக் காய்ச்சல் நோயின் தாக்கத்திற்கு இன்னும் உட்படாத நாடாகவே திகழ்கின்றது.

இந்நோய் எமது நாட்டினுள் பிரவேசிக்குமானால் அதனை கட்டுப்படுத்தவும், இல்லாதொழிக்கவும் பல்வேறு ஆக்க பூர்வமான திட்டங்களை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் உருவாக்கியுள்ளது. கடுமையான கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நோய் கண்டுபிடிப்பு இயலளவுகள் வலுப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, தேசிய மற்றும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு பறவைக் காய்ச்சல் மற்றும் நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றில் பயிற்சிகளும் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டுள்ளன.

நோய் கண்காணிப்பு திட்டத்தின் கீழ் 5,892 கள ரீதியான மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு பரிசோதிக்கப்பட்டவேளை இக்காலகட்டத்தில் கள மட்டத்தில் 19 பாதகமான பயிற்சி திட்டங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன.

**ஆ) பறவைக் காய்ச்சல் தயார் நிலையும் அதன் பதில் செயற்றிட்டமும்**

பறவைக் காய்ச்சல் தயார் நிலையும் அதன் பதில் திட்டத்திற்கும் AIPRP திட்டத்திற்கு உலக வங்கி 140 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்தது. அதை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் 2008 முதல் 2011 வரை அமுல்படுத்தியது. இத்திட்டம் 2011 மார்ச் 31 உடன் நிறைவு பெறவுள்ள அதேவேளை பின்வரும் திட்டங்கள் நடைமுறைபடத்தப்பட்டு வருகின்றன.

- M.Sc Applied Epidemiology பயிற்சிநெறிக்கு பேராதனை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்ய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதோடு 49 விண்ணப்பதாரர்கள் ஆபத்து முகாமை பற்றிய குறும் பயிற்சி நெறிக்கு பதிவு செய்துள்ளனர் மேலும் 55 பங்குபற்றுனர்கள் இதில் பங்குபற்றியுள்ளனர்.
- இரண்டு மிருக வைத்திய ஆராய்ச்சி நிலையங்கள் (VIC) யாழ்ப்பாணத்திலும், வாரியபொலவிலும் நிறுவுதல்.
- இரண்டு ஆய்வுகூடங்களை திருத்தியமைத்தல், பொல்கொல்லையில் அமைந்துள்ள வைரஸ் ஆய்வுகூடம், கண்ணொருவையில் அமைந்துள்ள VIC ஆய்வுகூடம்
- Audio Visual உபகரணங்களை பயன்படுத்தக்கூடிய பயிற்சி பெற்ற 10 அலுவலர்கள் மற்றும் உபகரணங்களுடன் விலங்கு பாதுகாப்பு மற்றும் சுகாதார திணைக்களத்தின் Audio Visual Unit மேம்படுத்தப்பட்டது.
- மூன்று பயிற்சி நிலையங்களை திருத்தியமைத்தல் - தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் - ICEAPH, வன்னிகம, சீப்புக்குளம்
- செயற்றிட்ட நடவடிக்கைகளை அடையாளங்காண்பதற்காக 4 பிரதிநிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**இ) நோய் பற்றிய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிக்கும் வசதிகளை முன்னேற்றுதல்**

கால்நடை ஆராய்ச்சி நிலையங்களினால் நோய் பற்றிய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக கால்நடை கள அலுவலர்களுக்கு தொழில்நுட்ப சேவை வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி கால்நடைவள உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்கும் உற்பத்திப் பொருட்களை அதிகரிப்பதற்கும் துரிதமான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கால்நடை ஆராய்ச்சி நிலையத்தை அமைக்கும் கொள்கைத் தீர்மானம் 2006 ஆம் ஆண்டு அமைச்சினால் எடுக்கப்பட்டது.

மூன்று புதிய **VIC** நிலையங்கள் தம்புல்ல, வாரியபொல, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்டு 2011 இல் பூர்த்தியடைந்துள்ளது.

**ஈ) மிருக வைத்தியசாலைகளை பிரதேச மட்டத்தில் ஸ்தாபித்தல்**

அதி வினைத்திறன்மிக்க விலங்கு சுகாதார சேவையை வழங்குவதற்கும் மற்றும் அது கிராமிய பண்ணை சமூகத்தைச் சென்றடைவதற்கும் நவீன மருத்துவ வசதியுடன் கூடிய மிருக வைத்தியசாலைகளை ஒவ்வொரு மாகாணத்திலும் ஸ்தாபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த நோக்கத்துடன் நுவரெலியாவில் மிருக வைத்தியசாலை ஒன்று நிறுவப்பட்டு மத்திய மாகாண கால்நடை சுகாதார திணைக்களத்துக்கு 2011 இல் கையளிக்கப்பட்டது.

## 5.1.2.3 மனித வள அபிவிருத்தி

**அ) சுயதொழில் ஊக்குவிப்பும் சிறு கைத்தொழிலை மேம்படுத்தலும்**

இச்செயற்திட்டமானது, பண்ணைத் தொழிலை பொருளாதார மயப்படுத்தப்பட்ட சுயதொழில் முயற்சியாக கொண்டு நடாத்துவதற்கு தேவையான அடிப்படை அறிவையும் செயல்முறை ஆற்றல்களையும் வழங்குகின்றது. பாற்பண்ணை, கோழிப்பண்ணை, பன்றி சினைப்படுத்தல் திணைக்களத்தின் விலங்கு சினைப்படுத்தல் பயிற்சி நிலையங்கள் மற்றும் பால் பதனிடல் போன்ற அம்சங்களுக்காக வதிவிடப் பயிற்சிகள் ஆகியன விலங்கு வளர்ப்பு பயிற்சி நிலையங்கள் ஊடாக நடாத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 105 இளைஞர் - யுவதிகள் பயிற்சிகளை பெற்றதுடன் மீளாய்வு காலகட்டத்தில் 247 வர்த்தகர்களுக்கு நீண்டகால பயிற்சிகள் வழங்கப்பட்டன. அத்தோடு 68 பயிற்சியாளர்களுக்கு வியாபார முகாமைத்துவ பயற்சி வழங்கப்பட்டது.

**ஆ) இயலளவு விருத்தி, கல்வி மற்றும் பயிற்சி**

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமானது, நவீன செயன்முறை விலங்கு வளர்ப்பு செயற்பாடுகளில் இயலளவு விருத்தி நிகழ்ச்சிகள் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பண்ணையாளர்களுக்காக நடாத்துகிறது. மொத்தமாக 121 பயிற்சி திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இப்பயிற்சி திட்டங்களில் 3,907 பேர் 2011 இல் பங்குபற்றியுள்ளார்கள்.

மிருக வைத்திய சேவையினை முன்னேற்றுவதற்காக 06 பிரதேச மிருக வைத்தியர்களுக்கு உள்நாட்டில் M.Sc பதிவு மேற்கொள்ள நிதியுதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

39 மாணவர்கள் தற்போது இரண்டு வருட வேளான்மை விவசாய டிப்ளோமா பாடநெறியை குண்டசாலையிலுள்ள விவசாய பாடசாலையில் மேற்கொள்கின்றார்கள்.

**இ) தகவல் பரிமாற்றம்**

திணைக்களமானது 05 தேசிய மட்ட கண்காட்சிகளில் பங்கு பற்றியுள்ளது. அவையாவன புத்தளம் (தெயடகிருள), கொழும்பு (Livestock EXPO-2011), திருகோணமலை (East Expo-2011), மட்டக்களப்பு (ITE), வவுனியா என்பனவாகும். இவற்றின் ஊடாக ஏற்கனவே கால்நடை துறை பண்ணையாளர்களுக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கும் கால்நடை துறையில் ஈடுபட்டுள்ள சிறிய நடுத்தர முயற்சியாளர்களுக்கும் புதிய தொழில்நுட்ப தகவல்களினை வழங்கி கல்வியூட்டவும் இத்திணைக்களத்தால் முடிகின்றது.

இக்கண்காட்சிகளில் மொத்தமாக 30,234 புத்தகங்கள் விநியோககிகப்பட்டன. இநநிகழ்வுகள் 115 தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் வானொலிகளிலும் ஒளிபரப்பப்பட்டன.

### 5.1.2.4 ஒழுங்குபடுத்தல் தொழிற்பாடுகளும் சேவைகளும்

**அ) கோழிப் பண்ணைகள் பதிவு**

பிரதேச மிருக வைத்தியப் பணிமனைகளில் கோழி வளர்ப்பு பண்ணைகளின் பதிவு 2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு பண்ணைகள் பதிவு மேற்கொள்வதினூடாக, பரவு நோய்களினை கட்டுப்படுத்துதல், தொழில்நுட்ப வசதிகள் வழங்குதல் மற்றும் கோழி உற்பத்திகளின் தரம் கட்டுப்பாடு என்பன மிகவும் இலகுவாக மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் ஊடாக 7,458 கோழிப் பண்ணைகள் பிரதேச மிருக வைத்திய அதிகாரிகளால் 2011 இல் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கணனி தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

**ஆ) மிருக அடையாளம் காண் மற்றும் கண்டு பிடிக்ககூடிய மத்திய கால்நடை பண்ணை ஸ்தாபித்தல்.**

2011 இல் இரண்டாம்கட்ட விலங்கு அடையாளப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கமைய, பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பண்ணைக்கும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் விஜயம் செய்யவுள்ள அதேவேளை பண்ணைகளிலுள்ள விலங்குகளுக்கு அடையாளம் இடப்படும். தற்போது 101,840 விலங்குகள் இனங்காணப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள விலங்குகளும் அவற்றின் கன்றுகளும் எதிர்வரும் ஆண்டுகளில் இனங்காணப்பட்டு அடையாளமிடப்படும். இதன் மூலம் மாடுகளின் எண்ணிக்கை பற்றிய தரவுகளை மிகச் சரியான முறையில் பராமரிப்பதற்கும் சட்டவிரோதமான கடத்தல் மற்றும் கொல்லல் போன்றவற்றைத் தடுக்கவும் எதிர்கால

பாலுற்பத்தியினை மதிப்பிட்டுக் கொள்ளவும் உற்பத்தித் திறன் அற்ற விலங்குகளை அகற்றவும் வழியேற்படும்.

**இ) அரசாங்க மிருக வைத்திய உத்தியோகத்தர்களின் சேவை விருத்தி**

கிராமிய கால்நடை சமூகத்தின் தேவை நிமித்தம் இத்திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு அலகாக அரசாங்க மிருக வைத்திய பணிமனைகள் திகழ்கின்றன. இப்பணிமனைகளில் அமையப்பெற்றுள்ள வசதிகளுக்கு ஏற்ப அடிமட்டத்தில் இருந்து சேவைகள் வழங்கப்படுகின்றன. அவை ஆகக்குறைந்தது கண்டுபிடிப்புக்கள், தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றை கொண்டிருத்தல் வேண்டும்.

தற்போது அதிகமான அலுவலகங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளின் குறைபாடுகளும் காணப்படுகின்றன. சில முழுமை பெறவில்லை. ஆகவே 2008 இல் ஆரம்ப கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தேவையான உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்தவும் உருவாக்கும் நோக்கத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது அத்துடன் பிரதேச மிருக வைத்திய பணிமனைகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

பத்து புதிய மிருக வைத்திய அலுவலகங்கள் நிறுவுவதற்கு ஏற்கனவே திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவை முறையே எட்டியாந்தோட்டை, கலிகமுவ, தம்புள்ள, கரவெட்டி, கெக்கிராவ, ஹதரலியத்த, அக்கரபத்தனை, ஹபராதுவ, ரித்தேதென்ன மற்றும் கேகாலையில் தங்கொடுவ, மாத்தளை, யாழ்ப்பாணம், கண்டி, நுவரெலியா, காலி, மட்டக்களப்பு மற்றும் புத்தளம் என்பனவாகும்.

## 5.2 வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) நிறுவனம்

மில்கோ நிறுவனமானது முழுமையாக அரசாங்க உடைமையாகிய நிறுவனமும், இலங்கையில் பால் உற்பத்தியில் முக்கிய இடத்தை வகிக்கும் தொழில் நிறுவனமாகும். இதன் 4 உற்பத்தி நிலையங்கள் முறையே கொழும்பு (நாரஹேன்பிட்ட), திகன, அம்பேவல, பொலன்னறுவை ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ளன. 10 வகையான மற்றும் 52 வைப்பு நிலையங்கள் ஹைலன்ட் என்ற பெயரில் பாவனையாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான உற்பத்திப் பொருட்களான கிருமி நீக்கப்பட்டு பதப்படுத்தப்பட்ட பால், யோகட், ஐஸ்கிறீம், சீஸ், நெய், தயிர், இனிப்பூட்டப்பட்ட பால், முழு ஆடைப்பால்மா என்பனவாகும்.

- மொத்தப் பால் கொள்வனவு ஒரு நாளைக்கு ஏறத்தாழ 160,000 லீட்டர் ஆகும்.
- 2300 பண்ணை விவசாயிகள் சங்கம் மில்கோ நிறுவனத்திற்கு பால் வழங்குகிறது.
- 77 பால் சேகரிக்கும் நிலையங்கள் நாட்டில் பரவலாகக் காணப்படுகிறது.
- இதில் 11 விற்பனை நிலையங்களும், 26 விற்பனை முகவர்களும் காணப்படுகின்றனர்.
- பாற்பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும் 1 லீட்டர் பாலின் விலை 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**2011.12.31 வரையான மில்கோ உற்பத்திகள்**

| பொருட்கள் | அலகுகள் | உற்பத்தி |
|---|---|---|
| பசும்பால் | மில்லி லீற்றர் | 7.38 |
| தொற்று நீக்கிய பால் | மில்லி லீற்றர் | 4.98 |
| பால்கட்டி | கிலோ கிராம் | 9616 |
| ஐஸ் கீரிம் | மில்லி லீற்றர் | 4.99 |
| தயிர் | மில்லி லீற்றர் | 0.629 |
| ஒடுக்கப்பட்ட பால் | கிலோ கிராம் | 293314 |
| யோகட் | மில்லி லீற்றர் | 5.09 |
| வெண்ணைகட்டி | கிலோ கிராம் | 563553 |
| முழு ஆடை பால்மா | மெட்ரிக் தொன் | 1322.3 |
| பால்மா | மெட்ரிக் தொன் | 86.55 |

## 5.3 தேசிய கால்நடை அபிவிருத்தி சபை

நாட்டின் எல்லா திசைகளையும் உள்ளடக்கி ஏறத்தாழ 40,000 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னங்காணிகளை தேசிய கால் நடை அபிவிருத்தி சபை தன்னகத்தே கொண்டுள்ளது. அதியுயர் ரக கன்றுகளை கால்நடைப் பண்ணையாளர்களுக்கும், கால்நடை மற்றும் விவசாய உற்பத்திகளை நுகர்வோருக்கும் வழங்க உத்தேசித்துள்ளது.

**தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் விநியோகிக்கப்பட்ட கால்நடை கன்றுகள் - 2011**

| செயற்திட்டம் | 2011 ஆம் ஆண்டுக்கான இலக்கு | அடைவு (2011.12.31 வரை) |
|---|---|---|
| கறவை மாடுகள் (ஆண்) | 749 | 839 |
| கறவை மாடுகள் (பெண்) | 708 | 539 |
| எருமை மாடுகள் (ஆண்) | 191 | 127 |
| எருமை மாடுகள் (பெண்) | 125 | 58 |
| பன்றி | 3,584 | 2,885 |
| ஆடு | 312 | 503 |
| செம்மறி ஆடு | 526 | 181 |

**பால் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களின் சாராம்சம்**

| உற்பத்தி | 2011 ஆம் ஆண்டுக்கான இலக்கு | அடைவு (2011.12.31 வரை) |
|---|---|---|
| பசும் பால் | 4,026,312 | 2,868,332 |
| எருமை பால் | 823,340 | 633,850 |
| ஆட்டு பால் | 32,876 | 10,753 |
| ரோயகட் (கோப்பைகள்) | 1,102,016 | 444,914 |
| தயிர் (லீட்டர்) | 63,240 | 71,277 |
| சுத்திகரிக்கப்பட்ட பால் (போத்தல்கள்) | 182,200 | 20,317 |
| தயிர் (லீட்டர்) – எருமைப் பால் | 461,362 | 334,312 |

**விலங்கு உணவு மற்றும் புல் உற்பத்தி**

| உற்பத்தி | 2011 ஆம் ஆண்டுக்கான இலக்கு | அடைவு (2011.12.31 வரை) |
|---|---|---|
| பசு உணவு (மெ.தொ.) | 494 | 750 |
| கோழி உணவு (மெ.தொ.) | 1,079 | 2161 |
| பன்றி உணவு (மெ.தொ.) | 476 | 265 |
| செம்மறி ஆடு உணவு (மெ.தொ.) | 12 | 47 |
| புற்தரை உற்பத்தி (ஏக்கர்) | 625 | 1,178 |
| வைக்கோல் உற்பத்தி (மெ.தொ.) | 638 | 348 |
| புல் உற்பத்தி (மெ.தொ.) | 600 | 369 |
| கனியுப்புக் கலவை (மெ.தொ.) | 30 | 20 |

**கோழி பண்ணை உற்பத்தி – 2011**

| உற்பத்தி | 2011 ஆம் ஆண்டுக்கான இலக்கு | அடைவு (2011.12.31 வரை) |
|---|---|---|
| இறைச்சி கோழிக் குஞ்சு | 2,697,199 | 2,329,205 |
| முட்டை கோழக் குஞ்சு | 1,136,851 | 1,141,007 |
| விற்பனைக்கான முட்டை | 1,952,161 | 2,095,328 |
| கோழி இறைச்சி (பறவைகளின் எண்ணிக்கை) | 11,400 | 37,161 |
| குயில் முட்டை | 127,500 | 42,704 |

இதற்கு மேலதிகமாக பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது.

- 110 விவசாயிகளுக்கு விவசாய பயிற்சிகளை வழங்கும் திட்டம்.
- 265 மெற்றிக் தொன் பசளை உற்பத்தி.
- 3,064 மாடுகளுக்கு செயற்கை மரபணு கொடுக்கப்பட்டது.
- 19,941,373 தேங்காய்களும், 8,460 லீட்டர் தேங்காய் எண்ணெயும் உற்பத்தி செய்துள்ளது.
- 5 மெற்றிக் தொன் இறப்பர் சீட் உற்பத்தி

**தேசிய கால்நடை அபிவிருத்தி சபையால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றம்**

| | விபரம் | 2011.12.31 வரையான அடைவு |
|---|---|---|
| 1 | பசும்புல் விதை இறக்குமதி (கிலோ கிராம்) | 4000 கிலோ கிராம் Bracharia Decumbence உள்ளடங்களாக 5,700 கிலோ கிராம் பசும் புல் விதை. தாய்லாந்து, அவுஸ்திரேலியாவிலிருந்து Mombasa Guinea மற்றும் 160 கிலோ கிராமில் 58 TD |
| 2 | சந்தையில் UHT டெட்ரா பக்கற்றுக்கள் அறிமுகம் (லீற்றர்) | 86,869 |
| 3 | நிலையத்தின் கொள்ளளவை அதிகரித்தல் | மாரவில பண்ணையில் இல.2 incubator கனடா தொழிநுட்பவியலாளரின் உதவியால் முழுமையாக பழுதுபார்க்கப்பட்டதோடு 1 வருடத்திற்கு கோழிக்குஞ்சு உற்பத்தி 0.5 மில்லியனிலிருந்து 1 மில்லியனாக அதிகரித்துள்ளது. |
| 4 | வர்த்தக முட்டை கோழிக்குஞ்சுகளின் இறக்குமதி | திவிநெகும திட்டத்திட்கு விநியோகிப்பதற்காக இலங்கைக்கு 175,000 ஒரு நாள் வர்த்தக முட்டை கோழிக்குஞ்சுகள் இறக்குமதி செய்யப்பட்டன. |
| 5 | பெற்றார் பறவைகளின் இறக்குமதி | மிரிஸ்வத்த மற்றும் கரந்தகொல்ல பண்ணைகளுக்கு 14,850 இறைச்சிக் கோழி பெற்றார் பறவைகள் இறக்குமதி செய்யப்பட்டன. |
| 6 | கால்நடைத்துறை உட்கட்டமைப்பு | பாலின் தரத்தினை விருத்தி செய்வதற்காக இந்த வருடம் 2 புதிய பால் இயந்திரங்கள் போபத்தலாவ மற்றும் டயகம பண்ணைகளில் அறிமுகம் செய்யப்பட்டன. |
| 7 | விந்து உற்பத்தியுடன் செயற்கை முறை சினைப்படுத்தல் | மலைநாட்டில் 200 சினைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. |
| 8 | திவிநெகும விவசாய நிகழ்ச்சித்திட்டம் | திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்பதற்கு NLDB பண்ணைகளில் 295 ஏக்கர்களில் மரக்கறிகள் மற்றும் ஏனைய விளைச்சல்கள் அறுவடை செய்யப்பட்டன. |
| 9 | தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி | NLDB தலைமை காரியாலயத்தினால் LAN முறை நிறுவப்பட்டது, இது பண்ணைகளுக்கிடையிலான வலையமைப்பினை உருவாக்குவதற்கான முதல் படியாகும். ICTA வினால் அறிமுகப்படுத்தப்பட்ட பரிந்துரைகளை முழுமைப்படுத்துவதற்கு NLDB இனால் தகவல் தொழில்நுட்ப பிரிவு நிறுவப்பட்டது. |

## 5.4 இலங்கை லிபியா கால்நடை அபிவிருத்தி கம்பனி

LANLIB வரையறுக்கப்பட்ட இலங்கை விவசாய கால்நடை அபிவிருத்திக் கம்பனியானது லிபியா அராபிய வெளிநாட்டு முதலீட்டுக் கம்பனியினதும் ஒரு கூட்டு முயற்சி செயற்திட்டமாகும். இதில் 51% தேசிய கால்நடை அபிவிருத்தி சபையும் மிகுதியை லிபிய முதலீட்டுக் கம்பனியும் கொண்டுள்ளது.

### 5.4.1 விவசாய நடவடிக்கைகள்

தற்பொழுது 347 ஏக்கர் விஸ்தாரமான காணியில் 8000 தென்னை மரங்கள் இருக்கின்றன, 2011 டிசம்பர் இறுதிவரை 321,990 தேங்காய்கள் பெறப்பட்டதோடு குறிப்பிட்ட காலப்பகுதியில் 4,700 கிலோகிராம் கொப்பறாவும் உற்பத்தி செய்யப்பட்டது.

### 5.4.2 கால்நடை சினைப்படுத்தல்

கோழிக்குஞ்சுப் பண்ணையை கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுடனும், உதவியுடனும் மாவத்தப் பண்ணையில் அங்கு பெற்றுக் கொள்ளக் கூடிய சாதனங்களுடன் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இங்கு ஒருநாள் பூர்த்தியான குஞ்சுகளை பராமரித்து இறைச்சிக்கும் முட்டைக்குமான குஞ்சுகளைப் பெற உத்தேசிக்கப்படுகின்றது. 253,280 கோழிகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட 371,500 முட்டைகளின் விற்பனையிலிருந்து 24,555,150 ரூபா பெறப்பட்டது.

2011 ஆம் ஆண்டில் வர்த்தக இறைச்சிக் கோழி அலகில் முட்டை உற்பத்தியின் எண்ணிக்கை 577,437 ஆகும்.

**கால்நடை உற்பத்தி பொருட்கள் - Lanlib**

| முட்டைகளின் எண்ணிக்கை | பால் (லீட்டர்) | தயிர் சட்டி (80 மி.லீ.) | தயிர் சட்டி (150 மி.லீ.) | தயிர் சட்டி (1 லீட்டர்) |
|---|---|---|---|---|
| 371,500 | 7,300 | 4,098 | 3,569 | 3,268 |

## 5.5 மகாவலி கால்நடை வியாபார நிறுவனம்

### 5.5.1 பின்னனி

மகாவலி 1982 ஆம் ஆண்டில் 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் 1989 ஆம் ஆண்டு மேற்படி நிறுவனம் உருவாக்கப்பட்டது. இலங்கை மகாவலி அதிகார சபை தேசிய அபிவிருத்தி வங்கி, நெதர்லாந்து அபிவிருத்தி கூட்டுதாபனம் என்பன இதன் பிரதான பங்காளர்களாகும். அத்துடன் மகாவலி வலயத்தினுள் இருக்கின்ற விவசாயிகளும் பங்குதாரர்களாவர்.

மகாவலி “எச்” வலயத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டிருக்கின்ற விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதுடன் வேலை வாய்ப்புகளை வழங்குவதோடு பயிர் செய்கை நிகழ்ச்சி திட்டத்தை ஊக்குவிப்பது இந்நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்நிறுவனமானது கோழி உற்பத்திதுறையில் ஈடுபட்டுள்ளதுடன் அதனை விற்பனை செய்கின்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. கோழி உற்பத்தி நிலையமானது தம்புத்தேகம அமைந்துள்ளது. அத்துடன் மகாவலி எச் வலயத்தில் இறைச்சி கோழி குஞ்சிகளை உற்பத்தி செய்யப்படுகின்ற வசதியும் காணப்படுகின்றது.

### 5.5.2 இன்றைய பிரதான வியாபார அடைவு

தற்பொழுது கம்பனி அதன் கவனத்தை ஒரு வயது நிரம்பிய (DOC) மற்றும் இறைச்சி கோழி குஞ்சுகளையும் உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தியுள்ளதுடன் மேலும் வடமத்திய மாகாண விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளதோடு வட பகுதி விவசாயிகளுக்கு உதவுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

### 5.5.3 2010/2011 ஆண்டுகளின் அடைவு

2008/2009 மற்றும் 2009/2010 ஆகிய நிதி ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2010/2011 வளர்ச்சியை காண முடிகின்றது.

| | 2008/2009 | 2009/2010 | 2010/2011 |
|---|---|---|---|
| **மொத்த இலாபம் (ரூ.)** | 372,431,203 | 161,794,261 | 205,712,970.71 |
| **தேறிய இலாபம் (ரூ.)** | 1,723,321 | 5,416,693 | 3,991,510.08 |

இந் நிலமையை சரிசெய்து இலாபமீட்டும் நிலைக்கு கொண்டு வர எடுத்த நடவடிக்கைகள் பின்வருமாறு.

- விவசாய தளங்களை 68 ஆக அதிகரித்தது.

- பயன் கொள்ளளவை 80% - 90% அதிகரித்தல்
- முன்பு இரண்டு அடுக்குகளாக இறக்குமதி செய்யப்பட்ட தாய் குஞ்சுக்கான தொகையை வருடத்துக்கு 6 தடவைகள் இறக்குமதி செய்தல்
- கம்பனி நிர்வாகத்தினர் கடும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## 5.5.4 2011/2012 மற்றும் அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான அபிவிருத்தி திட்டங்கள்

கம்பனி ஒரு வயது நிரம்பிய முட்டை குஞ்சுகளை மற்றும் இறைச்சிக்கான குஞ்சுகளையும் அதன் உற்பத்திகளை அதிகரிப்பதன் பிரயத்தனங்களை மேற்கொள்ளும். தற்பொழுது ஒரு வருடத்திற்கு 6 அலகுகளுக்கு மேல் (அதாவது 2000 ஒரு அலகில்) இறக்குமதி செய்கிறது. வடமேல் மாகாணத்திலும் விவசாய தளங்களை அதிகரிக்க அநேக வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. எனவே 2012 ஆரம்பத்தில் குறைந்தது 75 - 85 என்ற இலக்கை அடைவதாகும்.

வர்த்தக இறைச்சிக் குஞ்சு அலகு சம்பந்தமாக செலவு குறைந்த கொட்டில்களை உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி 10,000 குஞ்சுகள் வரை அடங்கக் கூடியதாக அமைத்து இறைச்சிக் கோழி உற்பத்தியை 2012 ம் காலாண்டு காலத்திற்குள் ஒரு மாதத்திற்கு 15,000 கிலோகிராம் வரை அதிகரிப்பதாகும்.

**ஐந்தாண்டு உற்பத்தி திட்டம் 2011/2016**

| வருடம் | முட்டை உற்பத்தி | கோழிக்குஞ்சு உற்பத்தி (இல.) | இறைச்சி கோழி உற்பத்தி (கிலோ கிராம்) |
|---|---|---|---|
| 2011/2012 | 1,490,000 | 1,164,500 | 474,000 |
| 2012/2013 | 1,490,000 | 1,164,500 | 660,000 |
| *2013/2014 | 1,620,00 | 1,200,000 | 846,000 |
| 2014/2015 | 1>800,000 | 1,450,000 | 1,400,000 |
| 2015/2016 | 1,800,000 | 1,450,000 | 1,400,000 |

*தாய்பறவைகளின் மட்டத்தை உயர்த்தல்

## 5.6 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் (STMF) அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் ஞாபகார்த்தினை நினைவூட்டுவதற்காக 2005 ஆண்டு 19 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.

மன்றம் முகாமைத்துவ சபையால் நிருவகிக்கப்படுவதுடன், இதன் ஆயுட்கால உறுப்பினராக அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் பேரனான கௌரவ ஆறுமுகன் தொண்டமான் உள்ளார்.

### 5.6.1 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் செயற்திட்டங்கள்

#### 5.6.1.1 பிரஜா சக்தி (E- Kiosk) அபிவிருத்தி செயற்திட்டங்கள்

பல இடங்களில் பிரஜா சக்தி செயற்திட்ட அமுலாக்கங்களின் ஊடாக தகவல், தொடர்பாடல், தொழில்நுட்பத்தின் பரவலான பிரயோகத்தின் உதவியுடன் குறைவிருத்தி பெருந்தோட்டச் சமூகத்தினது முழுமையானதும், பரந்த அளவினதுமான சமூக பொருளாதார அபிவிருத்தியை அடைவதை இச்செயற்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

குறைவரப் பிரசாத சமூகத்திற்கு இணையம் மற்றும் தகவல் தொடர்பாடல் ஆகியவற்றினை இச்செயற்திட்டம் வழங்குகின்றது. பெருந்தோட்டச் சமூகத்தினது கல்வி, சமூக கலாசாரம் மற்றும் குடிசார் நடவடிக்கைகளை இச்செயற்திட்டம் ஒருங்கிணைப்பது மட்டுமல்லாமல் ஒன்றுபட்ட அறிவுசார்ந்த மற்றும் சுயபூர்த்தி அடைந்த சமூகமாக தொழில்நுட்ப உபயோகத்தின் மூலம் நிலை மாற்றுவதற்கு இச்செயற்திட்டம் உதவியளிக்கின்றது.

**பிரஜாசக்தி செயற்திட்டத்தின் உள்ளீடுகள்**

- கணனி அறிவையும் மற்றும் இணையத்தள பாவனையையும் வழங்கும் வலைப்பின்னலாக செயற்படுவதுடன், உள்ளூர் மட்ட சமூக நிலையமாகவும் செயற்படுகின்றது.
- சமூக நடவடிக்கைகளின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உபயோகத்திற்கு ஏற்றதாக பெருந்தோட்ட சமூகத்தினை தயார்படுத்துவதற்கு தேவையான நன்கு தயார்படுத்தப்பட்ட மற்றும் பரீட்சிக்கப்பட்ட வழிகாட்டலையும் உபகரணங்களையும் கொண்டுள்ளது.
- இளைஞர்களை இலக்காகக் கொண்டு சுயதொழில் முயற்சியாளர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்தல்.

2006 ஆம் ஆண்டில் 27 பிரஜா சக்தி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 2007 ஆம் ஆண்டு இத்தொகை 37 ஆகவும், 2008 ஆம் ஆண்டு 41 ஆகவும் அதிகரித்துள்ளன. 2011 டிசம்பரில் இத்தொகை 45 ஆக உள்ளது. இந்நிலையங்கள் 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளதுடன், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டுள்ளன.

**பிரஜாசக்தி நிலையத்தில் பயிற்ச்சி பெறும் மாணவர்கள் 2011**

| பிராந்தியம் | பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை | 2006 இலிருந்து 2011 வரை பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| பதுளை | 10 | 6,492 |
| கேகாலை | 4 | 2,439 |
| இரத்தினபுரி | 5 | 1,974 |
| காலி | 4 | 1,631 |
| கண்டி | 7 | 4,040 |
| ஹட்டன் | 7 | 5,881 |
| நுவரெலியா | 8 | 5,454 |
| **மொத்தம்** | **45** | **27,911** |

## 5.6.1.2 நவசக்தி தொழில் முயற்சி அபிவிருத்தி செயற்திட்டம்

நவ சக்தி விசேட செயற்திட்டம் 2009 ஜனவரி மாதம் கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களினால் பின்தங்கிய வசதி வாய்ப்புகளற்ற பிரதேசங்களில் இருக்கும் இளைஞர், யுவதிகளை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தல், பொருளாதாரத்தை முன்னேற்றுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இச்செயற்திட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகளுக்கு பாற்பண்ணை, கோழிப்பண்ணை, ஆட்டுப்பண்ணை, சிறு வியாபாரங்களை ஆரம்பித்தல், ஆடை தைத்தல் மற்றும் பயிர்ச் செய்கை போன்ற பல்வேறுபட்ட சுயதொழில் துறைகளில் பயற்சி அளிக்கப்பட்டு வருகின்றன. 2008 ஒக்டோபர் வரையும் 313 இளைஞர், யுவதிகளுக்கு இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இக்கடன் தொகையான 14.1 மில்லியன் ரூபா மக்கள் வங்கியினூடாகவும் நிதியத்தினூடாகவும் வழங்கப்பட்டது.

**பயனாளிகள் தொடர்பான புள்ளிவிபரம்**

| காலம் | பயனாளிகள் தொகை | மொத்த நிதி கடன் உதவி (ரூபா.மில்லியன்) |
|---|---|---|
| ஜனவரி 2009 | 75 | 2.7 |
| ஆகஸ்ட் 2009 | 140 | 6.0 |
| ஆகஸ்ட் 2010 | 46 | 3.0 |
| ஆகஸ்ட் 2011 | 52 | 2.4 |
| **மொத்தம்** | **313** | **14.1** |

கீழ்வரும் அட்டவணை இத்திட்டத்தின்கீழ் ஜனவரி – டிசம்பர் 2011 வரை சுயதொழில் முயற்சியில் பயிற்றுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

| வகை | பயனாளிகள் தொகை | கடன் தொகை (ரூபா.) |
|---|---|---|
| மரக்கறி செய்கை | 34 | 1,565,000 |
| சுயதொழில | 12 | 525,000 |
| கோழிப்பண்ணை | 5 | 215,000 |
| தையல் | 1 | 50,000 |
| **மொத்தம்** | **52** | **2,355,000** |

2011 ஒக்டோபர் 29, 30 ஆம் திகதிகளில் நோர்வூட் தொண்டமான் விளையாட்டுத் திடலில் பிரஜா சக்தி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கான மாநாடும், ஒன்றுகூடலும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 3000 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்குபற்றினார்கள்.

## 5.6.2 நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள் (STMF)

தொண்டமான் ஞாபகார்த்த நிலையமானது 2005 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க சரத்திற்கமைய பின்வரும் செயற்திட்டங்களினூடாக விரிவாக்கப்பட்டுள்ளது.

- தொண்டமான் கலாசார நிலையம் - இறம்பொடை
- தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் - ஹட்டன்
- தொண்டமான் விளையாட்டு அரங்கம் - நோர்வூட்

### 5.6.2.1 தொண்டமான் கலாசார நிலையம் - இறம்பொடை

இறம்பொடை கலாசார மண்டபமானது அங்குள் ளள் மக்களின் கலை, கலாசாரங்களை வளர்க்கும் நோக்கில அமைக்கப்பட்டு வருகின்றது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஆணி மாதம் தொடக்கம் கர்நாடக சங்கீதம், விணை, மிருதங்கம் மற்றும் வயலின் போன்றன முழு நேர வகுப்புகளாக ஆசிரியர்களினால் நடத்தப்படுகின்றது.

30.08.2011 அன்று தொண்டமான் கலாசார மண்டபத்தில் நுண்கலை கல்லூரியானது உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது 62 மாணவர்கள் கர்நாடக சங்கீதம், பரதம் போன்ற கற்கைநெறிகளை பயின்று வருகின்றன. 2012 ஆம் ஆண்டு ஆகும்போது 240 மாணவர்கள் நுண்கலை கல்லூரிக்கு இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

### 5.6.2.2 தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் - ஹட்டன்

தொண்டமான் தொழில்பயிற்சி நிலையத்தின் முகாமைத்துவம் 2007 பங்குனி மாதம் தொண்டமான் தொழில்பயிற்சி நிலையத்திடம் கையளிக்கப்பட்டது. முதலாவது பயிற்சி வகுப்பு 2007 ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்திய உயர் ஸதானிகர் அலுவலகத்தின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட முழு நேர பயிற்சி இந்திய போதனா ஆசிரியர்கள் 7 பேரின் உதவியுடன் தொழிற்பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு உள்நாட்டு ஆசிரியர்களாலும் சில பயிற்சி நெறிகள் பயிற்றுவிக்கப்படுகின்றது. சராசரியாக 420 மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் பயிற்றுவிக்கப்படுவார்கள். 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 369 இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெற்றார்கள். 2007 ஜுலை முதல் 2011 டிசம்பர் வரை 1786 மாணவர்கள் மொத்தமாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

**தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் - ஹட்டன் 2011.12.31 பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள்**

| பாடநெறியின் பெயர் | பயிற்சி பெற்ற மாணவர்கள் |
|---|---|
| வாகன திருத்துனர் | 12 |
| மின் இணைப்பாளர் | 25 |
| இயந்திர திருத்துனர் | 16 |
| வானொலி, தொலைகாட்சி திருத்துனர் | 10 |
| அலுமினியம் பொருத்துனர் | 27 |
| வீட்டு மின் இணைப்பு பழுதுபார்ப்பாளர் | 31 |
| தச்சன் | 20 |
| கணனி பதிவு உதவியாளர் | 40 |
| ஆடை தயாரிப்பாளர் | 55 |
| உந்துருளி திருத்துனர் | 33 |
| ஒட்டுனர் | 36 |
| பட வரைஞர் | 10 |
| ஹோட்டல் பயிற்சி | 5 |
| ISMO ஜுக்கி | 33 |
| AAT | 16 |
| **மொத்தம்** | **369** |

### 5.6.2.3 தொண்டமான் விளையாட்டு அரங்கம் - நோர்வூட்

2010 ஆம் ஆண்டு சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் இலங்கை கால்பந்து சம்மேளனத்துடன் கைச்சாத்திட்டு. ரூபா 25 மில்லியன் செலவில் விளையாட்டுத்திடலை அமைப்பதற்கு இணைக்கப்பாடு ஏற்பட்டது. காற்பந்து விளையாட்டுத் திடல் முடிவுற்ற நிலையில் வலைப்பந்து, கூடைப்பந்து, உடற்பயிற்சி நிலையம், கரப்பந்தாட்டம் ஆகியவற்றிற்கான பயிற்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 5.7 பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம்

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியமானது, பெருந்தோட்டவாழ் சமூகத்தினரின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றுவதன் பொருட்டு 1992 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18ம் திகதி பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நல நிதியம் (PHSWT) என்ற பெயரில் தாபிக்கப்பட்டது. 2002 ஒக்டோபர் 22ஆம் திகதி இவ்வமைப்புக்கு பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம் என பெயர்மாற்றப்பட்டது. பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியமானது 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதோடு 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டது.

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் இவ் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியமானது பெருந்தொட்டத்துறையில் மேற்கொள்ளப்படும் மீள் கூரையிடல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, தோட்ட வீடமைப்பு செயற்றிட்டம், கிராமிய செயற்றிட்டங்கள், பெருந்தோட்ட மீளமைப்பு செயற்றிட்டம், பெருந்தோட்ட அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித்திட்டம் போன்ற சகல செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக உள்ளது.

**பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் சாராம்சம்**

| செயற்பாடுகள் | அலகுகளின் எண்ணிக்கை | பௌதீக முன்னேற்றம | | நிதியில் முன்னேற்றம் (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|---|
| | | பூர்த்தி செய்யப்பட்டவை | நிறைவின்மை | |
| புதிய வாழ்க்கை வீடமைப்ப 1 | 347 | 86 | 261 | 131.19 |
| புதிய வாழ்க்கை வீடமைப்ப 2 | 425 | 50 | 375 | 9.52 |
| மலசலகூடம் | 1643 | 1583 | 60 | 42.80 |
| மீள் கூரையிடல் 1 | 952 | 952 | 0 | 34.22 |
| மீள் கூரையிடல் 2 | 1339 | 451 | 888 | 33.98 |
| நீர் வழஙகல் | 6 | 5 | 1 | 2.15 |
| கூடைப்பந்து திடல் | 31 | 29 | 2 | 21.25 |
| விளையாட்டு மைதானம | 24 | 19 | 5 | 3.13 |
| பாதை கொங்கிரீட | 24,454 | 24,271 | 183 | 68.44 |
| பாலம | 3 | 2 | 1 | 11.40 |
| பாடசாலை தரமுயர்த்தல் | 9 | 8 | 1 | 26.72 |
| விசேட மலசல கூடம | 43 | 43 | 0 | 1.70 |
| சமூக நிலையங்கள் | 8 | 8 | 0 | 5.46 |
| தொழிலாளர் வீடுகளை தரமுயர்த்தல் | 8 | 8 | 0 | 2.29 |
| வடிகால் நிர்மாணம் | 1 | 1 | 0 | 7.14 |
| மயானம் | 01 | 0 | 01 | |
| சமய தலங்களை அபிவிருத்தி செய்தல் | 5 | 5 | 0 | 9.36 |

### 5.7.1 விசேட வேலைத்திட்டங்கள் - 2011

அமைச்சினால் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மூலமாக முன்னெடுக்கப்படுகின்ற விசேட வேலைத்திட்டங்களானது மலையக தொழிலாளர்களின் நன்மை கருதியும் அவர்களின் சமூக வாழ்க்கை தரத்தை உயர்த்துவதையும் நோக்கமாக கொண்டும நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

உட்கட்டடைப்பு அபிவிருத்தி, கல்வி ஊக்குவிப்பு நடவடிக்கைகள், நீர்ப்பாசன அபிவிருத்தி போன்ற பல்வேறு வேலைத் திட்டங்கள் அதாவது மஹிந்த சிந்தனையில் கீழ் வீதிகளுக்கு கொங்கிரீட் இடல், கிராம அபிவிருத்தி மற்றும் மத சார்பான நடவடிக்கைகளும் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் அடிப்படையில் கண்டி, ஹட்டன், நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, மற்றும் கேகாலை ஆகிய பிரதேசங்கள் மேற்படி திட்டத்தின் மூலம் நன்மை அடைகின்றன.